


# 3 வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து பொலன்னறுவைக்கால இறுதிவரை இலங்கையின் வரலாறு

**இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் பற்றியும் ஆரியர் குடியேற்றங்களின் பரம்பலில் இருந்து பொலன்னறுவைக் காலத்தின் இறுதி வரையிலான அரசியல் வரலாற்றில் இடம்பெற்ற முக்கிய சந்தர்ப்பங்கள் தொடர்பான தகவல்கள் பற்றியும் இவ்வலகில் கற்றுக் கொள்ள சந்தர்ப்பம் கிட்டுகின்றது.**

## வரலாற்றுக்கு முற்பட்ட காலம்




தேசப்படம் *3.1* இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட கால வாழ்விடங்கள்

*1.*ஆனையிறவு
*2.*பூநகரி
*3.*பரந்தன்
*4.*இரணை மடு
*5.*முல்லைத்தீவு
*6.*வெல்லன் குளம்
*7.*மாங்குளம்
*8.*முருங்கன்
*9.*நச்சியார வெள்ளச்சிமலை
*10.*திருக்கோணமலை
*11.*குதிரைமலை
*12.*மோதரகம் ஆறு
*13.*மரிச்சுக்கட்டி
*14.*வில்பத்து
*15*அனுராதபுரம்
*16.*பந்தன் குழி
*17.*பொம்பரிப்பு
*18.*கலா ஓயா
*19.*வணத்த வில்லு
*20.*கந்தன் காடு
*21.*திருக்கோணமடு
*22.*அரனகல்லு
*23.*பொலன்னறுவை
*24.*மகாவலிகங்கை
*25.*பாலாவி
*26.*புத்தளம்
*27.*ஆணைமடு
*28.*ஆண்டிகம
*29.*பள்ளம
*30.*பங்கதெனிய
*31.*கலாவத்த
*32.*கண்டி
*33.*தனிகல
*34.*பேராதனை
*35.*நில்கல
*36.*ஹேனபெத்த
*37.*பிபில
*38.*கம்பளை
*39.*மடுல்சீம
*40.*நாவலபிட்டி
*41.*பூண்டுலோயா
*42.*பொத்துவில்
*43.*கித்துல்கல
*44.*பியகம
*45.*அவிசாவளை
*46.*பெலிலென குகை
*47.*வெளிமட
*48.*களனி
*49.*மல்வானை
*50.*இராவணன் எல்ல
*51.*பட்டதொம்பலேன
*52.*தம்புல்ல
*53.*ஹங்வெல்ல
*54.*ஹெட்டஹேத்த
*55.*நுவரெலியா
*56.*நோர்வுட்
*57.*பண்டாரவளை
*58.*திக்ஓயா
*59.*மஸ்கெலியா
*60.*சிவனொளிபாதமலை
*61.*பட்டதொடலேன
*62.*எஹெலியகொட
*63.*லேகம
*64.*குவும்பிகல
*65.*பம்பரகஸ்தலாவ
*66.*ஒக்கம்பிட்டிய
*67.*ஹோரட்டன் சமவெளி
*68.*பொகந்தலாவ

## வரலாற்றுக்கு முற்பட்ட காலம்

வரலாற்றுக்கு முற்பட்ட காலம் என்பது எழுத்து மூல வரலாறு ஆரம்பமாவதற்கு முற்பட்ட காலமாகும். இந்நாட்டில் விஜயனின் வருகைக்கு முற்பட்ட காலம் வரலாற்றுக்கு முற்பட்ட காலமாகும். இலங்கையில் ஆவணப்படுத்தப்பட்ட வரலாறு காணப்படுவது கி.மு 6ஆம் நூற்றாண்டு அளவிலாகும். இருப்பினும் அதற்கு முன்பிருந்தே இலங்கையில் மக்கள் வாழ்ந்தார்கள் என்பது தொல்பொருள் சான்றுகளிலிருந்து அறியக் கூடியதாக உள்ளது. ஆவணப்படுத்தப்பட்ட ஆதாரங்கள் இன்றி தொல்பொருள் சான்றுகளை மட்டும் ஆதாரமாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்ட வரலாற்றுக்குரிய காலமே வரலாற்றுக்கு முற்பட்ட காலம் என அழைக்கப்படுகின்றது.



*உரு 3.1 இரத்தினபுரியில் இரத்தினக்கல் அகழ்வு இடங்களில் கண்டெடுக்கப்பட்ட கல் ஆயுதங்கள்*

இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்துக்குரிய மக்கள் வாழ்ந்ததாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள பல இடங்கள் காணப்படுகின்றன. இரத்தினபுரிப் பிரதேசத்தின் வண்டல் மண் படைகளுக்கிடையில் காணப்பட்ட பளிங்குக்கல், செம்மஞ்சள் கற்களால் தயாரிக்கப்பட்ட வரலாற்றுக்கு முற்பட்ட காலத்துக்கு உரித்தான கல்லாயுதங்களும் வானர மனிதனுடையது எனக் கருதக்கூடிய பற்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை மிகப் பண்டைய வரலாற்றுக்கு முற்பட்ட மக்களுக்குச் சொந்தமானவையெனக் கருதமுடியும். இவற்றை பழைய கற்காலத்துக்குரிய பொருட்கள் எனக் குறிப்பிடலாம். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்துக்கு உரிய தொல்பொருட்கள் பல இடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. புலத்சிங்கள, பாகியன்கலகுகை, குருவிட்டைக்கு அருகிலுள்ள பட்டதொம்ப குகை, கேகாலைக்கு அருகில் உள்ள அத்தனகொடையில் அமைந்துள்ள அலுனெ, பெல்லன்பதி பெல்லச, கித்துல்கல பெலிபெல்லஸ்ஸ ஆகிய இடங்கள் இவற்றுள் சிலவாகும். வரலாற்றுக்கு முற்பட்ட கால மனித எச்சங்கள் பாகியன் கல, பட்டதொம்பக் குகை, பெல்லன் பதி பெல்லச ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. நில்கல, பெலிகல்கே இராவணன் எல்ல ஆகிய குகைகளில் மனிதனுடைய எலும்புத் துண்டுகள் என்பன கண்டெடுக்கப்பட்டுள்ளன.

## வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் மக்களுடைய வாழ்க்கை முறை

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் மனிதனுடைய வாழ்க்கை முறைபற்றிக் கற்கும் போது அவர்கள் பயன்படுத்திய உணவு, இருப்பிடம், அவர்களுடைய வேலைகளை நிறைவேற்றிக்கொள்வதற்குப் பயன்படுத்திய ஆயுதங்கள் என்பன தொடர்பாகக் கவனம் செலுத்துதல் அவசியமாகும்.




இலவச விநியோகத்திற்காக

அவர்களுடைய இருப்பிடம் அளவில் சிறியதாக காணப்பட்டது. இதிலிருந்து ஒன்று அல்லது இரண்டு குடும்பங்கள் இவ்வீடுகளில் வசித்து இருக்கலாம் எனக் கருதமுடிகிறது. கித்துல்கல அகழ்வின் போது கண்டெடுக்கப்பட்ட உணவு சமைப்பதற்கு பயன்படுத்திய அடுப்பு சற்று சிறியதாகக் காணப்படுவது இவற்றிற்கு சான்று பகர்கின்றன. அது அதிக எண்ணிக்கையிலான குடும்பம் பயன்படுத்துவதற்கு போதுமானதல்ல என்பதை விளக்குகின்றது. உணவு வழங்குதல் இலகுவாக அமைய குடும்ப எண்ணிக்கையை குறைவாக வைத்திருப்பது வசதியாக அமைந்தது. கித்துல்கல அகழ்வின் போது ஒரு கட்டடத்தின் இடிபாடு கண்டுபிடிக்கப்பட்டது. இந்த நிர்மாணிப்பு 12500 வருடங்களுக்கு முற்பட்டது என நம்பப்படுகிறது.



*உரு 3.2 பலாங்கொடை மனிதனின் கற்பனை உருவம்*



*உரு 3.3 சிறிய கல்லாயுதங்கள்*

பலாங்கொடை மனிதன் முள்ளம் பன்றி, அணில், குரங்கு ஆகிய சிறிய விலங்கினங்களை அதிகளவு உணவாக பயன்படுத்தினான். காட்டுப்பன்றி, மரை போன்ற பெரிய விலங்கினங்களின் இறைச்சியையும் அரிதாக உணவிற்காகப் பயன்படுத்தினான். நீரிலும், மரத்திலும் உள்ள நத்தை வகைகள் உணவில் பிரதான இடத்தினை வகித்தன என்பது கிடைக்கப் பெற்ற ஓடுகளில் இருந்து அறியக் கூடியதாயுள்ளது. தாவர உணவு வகைகளுள் காட்டு வாழை, கெக்குனு விதை, ஆசனிப்பலா விதை என்பனவும், வள்ளிக்கிழங்கு போன்றனவும் உணவிற்காகப் பயன்படுத்தப்பட்டன. இற்றைக்கு 27000 வருடங்களுக்கு முன்பும் உப்பு பயன்படுத்தப்பட்டது என்பதற்கு பெலி குகையிலிருந்து சான்று கிடைத்துள்ளது. பட்டதொம்ப குகை போன்ற நாட்டின் உட்பகுதியில் அமைந்துள்ள இடங்களில் கடற் சிப்பிகளின் ஓடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இது கடற்கரைப் பிரதேசத்துடன் தொடர்புகள் பேணப்பட்டன என்பதனைத் தெளிவுபடுத்துகின்றது.

கித்துள்கல பெலி குகை, பட்டதொம்ப குகை, பாகியன்கல குகை, என்பனவற்றில் அக்காலத்தில் இடம்பெற்ற இறந்தவர்களுக்கான மரணச் சடங்கு சம்பிரதாயங்கள் தொடர்பான தகவல்கள் கிடைத்துள்ளன. ஒருவர் இறக்க நேரிடும் போது உடலை அப்புறப்படுத்திய பின் அதன் எலும்புகளை எடுத்துச் சென்று ஆழமற்ற குழிகள் தோண்டிப் புதைத்து வைத்ததனை அறிய முடிகின்றது. இந்த மண்டையோடுகள் சேற்றுக் கல்லினால் நிறந்தீட்டப்பட்டிருந்தன. பலாங்கொடை மனிதனால் பயன்படுத்தப்பட்ட கேத்திர கணித முறையில் அமைந்த கல்லாயுதங்கள் அகழ்வின் போது கண்டெடுக்கப்பட்டுள்ளன. யாதேனும் கேத்திரக் கணித வடிவத்தைப் பெறும் நோக்குடன் ஆயுதங்களின் ஓரங்கள் மெதுவாக சீவப்பட்ட கல்லாயுதங்கள் சிறிய கல்லாயுதங்கள் என அழைக்கப்பட்டன. ஆயுதங்களை வடிவமைத்தமையால்

அவை கூர்மையுள்ளனவாக இருந்தன. இவற்றை கல்லாயுதஙகள் என வரையறை செய்யலாம். இவை பெரும்பாலும் 2 சென்ரிமீற்றர் அளவைக் கொண்டவை.சில 4.5 சென்ரி மீற்றர் அளவினதாகும்.

மத்திய கற்காலத்தில் பயன்படுத்தப்பட்ட கல்லினாலான கோடரி, அம்மி, உரல், உலக்கை போன்ற உபகரணங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை பல்வேறு தேவைகளையும் பூர்த்தி செய்வதற்காக பயன்படுத்தப்பட்டனவாகும்.

## ஆரியக் குடியேற்றங்கள் அமைக்கப்படுதல்

### விஜயனின் வருகை

இலங்கையில் ஆரியக் குடியேற்றங்களின் அமைவிடம் தொடர்பாக தொல் பொருள், இலக்கியம் ஆகிய மூலாதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. மகாவம்சம், தீபவம்சம் ஆகிய கர்ண பரம்பரைக் கதைகள் இவற்றுள் பிரதானமானவை. பாகியனின் அறிக்கையிலும் ஹியுங் சாங் என்பவரது அறிக்கையிலும் இலங்கையின் குடியிருப்புகள் தொடர்பான தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. ''வலாகஸ்ஸ'' ஜாதகக்கதையும் இலங்கைக்குக் குடிபெயர்ந்தவர்கள் பற்றிய தகவலை வழங்கும் மூலாதாரமாகும்.


கர்ண பரம்பரைக்கதைகளுக்கு ஏற்ப கி.மு 6ஆம் நூற்றாண்டின் நடு அரைப்பகுதியில் முதன்முதலாக இந்தியாவிலிருந்து இடம்பெயர்ந்த மக்கட் குழு இலங்கைக்கு வருகை தந்ததாகத் தகவல்கள் உள்ளன. விஜயன் உள்ளிட்ட குழுவினரே இலங்கைக்கு வந்த முதலாவது குழுவினராகக் கருதப்படுகின்றனர். அவர்கள் ஆரியர் சமூகத்தில் இருந்து வருகை தந்தமையால் அவர்கள் அமைத்த குடியேற்றம் ஆரியக் குடியேற்றம் எனப் பெயர் பெற்றது.

மகாவம்சத்தின்படி விஜயன் இந்தியாவின் லாடா நாட்டின் சிங்கபுரத்தை ஆட்சி செய்த சிங்கபாகு அரசனின் மகனாவான். விஜயன் தனது இளமைக் காலத்தில் துர்நடத்தையும் துர்ப்பழக்கவழக்கங்களும் கொண்டிருந்தமையால் அவனுடைய நடத்தை செயற்பாடு தொடர்பாக மக்கள் மன்னனிடம் முறையிட்டனர். இதனால் விஜயன் உள்ளிட்ட 700 பேர் கொண்ட குழுவினரை மன்னன் நாடு கடத்தியதாக மகாவம்சம் குறிப்பிடுகின்றது. இக்குழுவினர் வட இந்தியாவின் லாடா நாட்டிலிருந்து பாருக்கச்ச சுப்பாரக ஆகிய துறைமுகங்களைக் கடந்து இலங்கையின் வடமேற்குக் கடற்கரையில் மல்வத்து ஓயாவிற்கும் கலா ஓயாவிற்கும் இடையிலான கரையோரத்தில் வந்திறங்கியதாக மகாவம்சம் குறிப்பிடுகின்றது. அவர்கள் இந்த இடத்தை தம்பபண்ணி என்று அழைத்தனர்.

மகாவம்சத்திற்கு ஏற்ப இக்குழுவினர் இலங்கைக்கு வருகை தந்தது புத்தர் பெருமான் பரிநிர்வாணம் அடைந்த போயா தினத்திலாகும். புத்தர்பெருமான்


இலவச விநியோகத்திற்காக

பரிநிர்வாணம் அடைய முன்பு இந்திரனை அழைத்து எதிர்காலத்தில் இலங்கையில் பௌத்த சமயம் நிலைக்கப் போவதாகவும், அதனால் விஜயனையும் அவனது தோழர்களையும் இலங்கையையும் பாதுகாக்கும்படி அவனுக்குக் கூறியதாகவும் அந்தப் பொறுப்பை இந்திரன், உப்புல் தெய்வத்திடம் ஒப்படைத்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. உப்புல் தெய்வம் நாடோடித்துறவி ஒருவர் போல வேடமிட்டு வந்து அவர்களுக்குப் பிரித் நூலைக் கட்டி பிரித் பாராயணம் செய்யப்பட்ட நீரைத் தலையில் தெளித்து பாதுகாப்பு வழங்கியதாகவும் மகாவம்சம் கூறுகின்றது.




*தேசப்படம் **3.2** இலங்கை இந்தியாவிற்கு அண்மையில் அமைந்தள்ளமை*

இலங்கைக்கு வந்த குழுவினர் குவேனியைச் சந்தித்ததாகவும் அவள் தன்னுடைய மாய சக்தியால் விஜய னுடைய குழுவினரை ஒரு பொய்கையில் சிறை செய்ததாகவும் கூறப்படுகின்றது. இறுதியில் அக் குழுவினரை விடுவிக்கச் சென்ற இளவரசன் விஜயன் அக் குழுவினரை மீட்டதுடன் அவர்களுக்கு இலங்கை இராச்சியத்தை வழங்க குவேணி சம்மதித்ததாகவும் மகாவம்சம் கூறுகின்றது.

அதன் பின் குவேனியினால் வழங்கப்பட்ட அரிசியினால் சமைக்கப்பட்ட சோற்றை இக்குழுவினர் உண்டதாகவும், குவேனியால் கைப்பற்றப்பட்ட வியாபாரக் கப்பலில் இருந்து பெறப்பட்ட அரிசியில் இருந்தே இந்த உணவு சமைக்கப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

அன்று இரவு கிரிசவத்துபுற நகரில் விழா ஒன்று நடைபெற்ற வேளை இயக்கர் குலத்தவர்கள் அங்கு ஒன்றுகூடியிருந்ததாகவும் குவேனியின் உதவியுடன் அக்குலத்தினரை விஜயன் தோற்கடித்து இலங்கை இராச்சியத்தைப் பெற்றுக் கொண்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

குடியேற்றங்களை அமைத்துக் கொண்ட பின்னர் விஜயன் முடிசூட்டிக் கொள்ள வேண்டுமென அமைச்சர்கள் கருதினர். இதற்காக இளவரசன் விஜயனின் விருப்பப்படி இந்தியாவின் மதுராபுரித்தில் இருந்து இளவரசியைக் அழைத்து வந்தனர். முடிசூடிக் கொண்ட விஜய மன்னன் தம்பபண்ணியைத் தனது தலைநகராகக் கொண்டு 38 வருடங்கள் ஆட்சி செய்தான். இவனுடைய அமைச்சர்களும் அனுராத, உபதிஸ்ஸ, உருவெல, விஜித என்ற குடியேற்றங்களை அமைத்தனர்.

## ஆரியக் குடியேற்றங்களின் பரம்பல்

இந்நாட்டில் ஆரியர் குடியேற்றங்களை அமைத்தமை ஒரே தடவையில் நடந்த நிகழ்ச்சியன்று. குடியேற்றங்களை அமைத்தல், பரம்பல் என்பன காலத்துக்குக் காலம் வருகை தந்த இந்திய குடிப்பெயர்வுக் குழுவினரினால் ஏற்பட்டதாக கர்ணப் பரம்பரைக் கதைகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களிலிருந்து அறியக் கூடியதாய் உள்ளது.




தேசப்படம் 3.3 ஆரியக் குடியேற்றங்களின் பரம்பல்

கி.மு 6ஆம் நூற்றாண்டில் இருந்து இந்தியாவில் இருந்து இந்நாட்டிற்கு வருகை தந்த பல குழுவினரைப் பற்றி வம்சக் கதைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. இளவரசன் விஜயன் உட்பட்ட குழுவினர், இளவரசன் விஜயனின் அரசியாக மதுராபுரியில் இருந்து அழைத்து வரப்பட்ட இளவரசி உள்ளிட்ட குழுவினர், பண்டுவாசுதேவன் உட்பட்ட குழுவினர், பத்தகச்சனா உள்ளிட்ட குழுவினர், அவளுடைய சகோதரர் உள்ளிட்ட குழுவினர், ஆகியோர் குடியேற்றங்களின் ஆரம்பத்திற்கும், பரம்பலுக்கும் பங்களிப்புச் செய்த பிரதான குடிப்பெயர்வினரெனக் குறிப்பிடலாம்.

இக்குழுவினர் இலங்கையின் வடமேற்கு, கிழக்கு கரைகளில் அமைந்துள்ள துறைமுகங்களில் கரையிறங்கியதுடன், அவர்கள் தமது நிரந்தரக் குடியிருப்புக்களை அமைக்க உலர்வலயத்தைச் சேர்ந்த ஆற்றங்கரைப் பிரதேசங்களைத் தெரிவு செய்தனர். இதற்கான காரணம் அவர்களுக்கு நன்கு பழக்கப்பட்ட விவசாயத் தொழிலை மேற்கொள்வதற்கு ஏற்றதான பௌதிகக் காரணிகள் அப்பிரதேசங்களில் காணப்பட்டமையாகும். சமவெளிப் பிரதேசம் நீர்வசதி, விவசாயத்திற்குப் பொருத்தமான காலநிலை என்பவற்றினை இப்பிரதேசம் கொண்டிருந்தமையால் இப்பிரதேசத்தினைத் தமது குடியிருப்புக்களை அமைப்பதற்குத் தெரிவு செய்தனர்.

விஜயன் உட்பட்ட குழுவினர் இலங்கையின் வடமேற்குக் கரையோரமாகத் தரையிறங்கி அவர்களுடைய குடியிருப்புக்களைக் கதம்ப நதி, கம்பீர நதி, கோண நதி என்பவற்றின் கரைகளில் அமைத்துக் கொண்டனர். மகாவம்சத்திற்கேற்ப இளவரசன் விஜயனால் தம்பபண்ணி குடியிருப்பும் அமைக்கப்பட்டது. அனுராத அமைச்சரால் அனுராதகாமமும், உபதிஸ்ஸ அமைச்சரால் உபதிஸ்ஸ காமமும் உதயனி, உருவெல ஆகிய ஏனைய அமைச்சர்கள் தத்தம் பெயர்களால் குடியிருப்புக்களையும் அமைத்துக் கொண்டனர். இக்குடியிருப்புக்கள் அனைத்தும் மல்வத்து ஓயா, (கதம்ப நதி) கலா ஓயா (கோண நதி) ஆகிய ஆறுகளின் அருகில் அமைக்கப்பட்டிருந்தன.

இதன் பிறகு இளவரசன் விஜயனின் பட்டத்து இராணியாக்க மதுராபுரியில் இருந்து அழைத்து வரப்பட்ட இளவரசி உள்ளடங்கிய குழுவினரும் இங்கு வந்து குடியிருப்புக்களை அமைத்துக் கொண்டனர்.

பண்டுவாசுதேவ அரசனுடைய பட்டத்து இராணியான பத்த கச்சானா உட்பட்ட குழுவினர் இலங்கையின் கிழக்கு கரையில் அமைந்துள்ள கோகர்ணம் (திருகோணமலை) துறைமுகத்தில் கரையிறங்கினர். அவளுடைய சகோதரர்களும் குழுவினரும் இத்துறைமுகத்தினூடாகவே இலங்கையில் குடியேறினர். இந்த இளவரசர்கள் விஜித்தகாமம், ராமகோண, தீக காம, ரோகண ஆகிய குடியேற்றங்களை இலங்கையின் கிழக்கு, தென் கிழக்கு திசைகளில் அமைத்துக் கொண்டனர்.

மேற்குப் பிரதேசத்தில் களனி கங்கையின் கரையில் கல்யாணி என்ற குடியிருப்பும் உருவாகியது. தென்கிழக்குப் பிரதேசத்தில் கிரிந்தி நதிக் கரையில் மகா காமம் என்ற குடியிருப்பும், கபரகந்த நதிக் கரையில் காச்சரகாமம் ஆகிய குடியிருப்புகளும் அமைக்கப்பட்டன. இக்குடியேற்றங்கள் வரலாற்றுக்கு முற்பட்டகால குடியேற்றங்கள் எனக் கருதப்படுகின்றன. ஆரம்ப காலக் குடியேற்றங்கள் நதிக் கரைகளில் அமைக்கப்பட்டதுடன் சனத்தொகை அதிகரிப்புடன் குடியேற்றங்கள் உள்நாடு நோக்கியும் பரவலடைந்தது.

## ஆரியரின் அரசியல், பொருளாதார, சமூக, கலாசார முறைகள்

ஆரியர்கள் இந்நாட்டில் அமைத்த முதலாவது குடியிருப்பு காமம் (கிராமம்) என அழைக்கப்பட்டது. அனுராத காமம், உபதிஸ்ஸ காமம் ஆகிய குடியிருப்புகள் இதற்கு உதாரணங்களாகும். ஆரியக் குடியிருப்புகள் அமைக்கப்பட்ட பிரதேசங்களின் ஆட்சியாளர் ''காமினி'' என்ற பெயரைப் பெற்றிருந்தார். காலப்போக்கில் காமினிகளுள் பலம் வாய்ந்த ஆட்சியாளன் அரசன் என்ற பெயரால் அழைக்கப்பட்டான்.

ஆரியர்கள் இந்தியாவில் இருந்து வந்து இங்கு குடியிருப்புக்களை அமைத்துக் கொண்ட காலத்தில் விவசாயம், விலங்கு வேளாண்மை, வியாபாரம் போன்ற நடவடிக்கைகள் இந்தியாவில் நிலவின. ஆரியர்கள் இலங்கைக்கு வருகை தந்த பின்பும் அப்பொருளாதார நடவடிக்கைகளில் தொடர்ந்தும் ஈடுபட்டனர். ஆரியர்கள் வாழ்ந்த பிரதேசத்தின் புவியியல் பின்னணியை ஆராய்ந்து பார்க்கும் போது விவசாயத்துக்குப் பொருத்தமான பிரதேசத்தை தெரிவு செய்துள்ளமை தெளிவாகின்றது. பத்தகச்சனாவுடன் வருகை தந்த அவனுடைய சகோதரனான அனுராத என்ற பெயருடையவன் குளம் ஒன்றைக் கட்டியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆரியர்கள் இந்நாட்டிற்கு வந்தபோது வைதீக சமயம் இந்திரன், சூரியன் ஆகிய தேவர்களை வழிபடும் முறைகள் என்பன இந்தியாவில் காணப்பட்டன. அவர்கள் இந்தியாவில் நிலவிய ஜைன சமயம் பற்றியும் அறிந்திருந்தனர். இந்த வழிபாட்டு முறைகள் இலங்கையிலும் பரவி இருக்கலாம். அத்துடன் பௌத்த சமயம் தொடர்பாகவும் அறிந்திருக்கலாம்.

**பயிற்சி :**

1. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த மனிதர்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய நான்கு இடங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
2. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்துக்குரிய மனிதன் உணவுக்குப் பயன்படுத்திய தாவர உணவு வகைகள் யாவை?
3. ஆரியர் குடியிருப்புக்களின் பரம்பல் தொடர்பான பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| குடியிருப்புக்கள் | அருகிலமைந்த நதியின் பண்டைய காலப் பெயர் | அந்நதியின் தற்போதைய பெயர் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

**செயற்பாடு :**

1. இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதர் தொடர்பான தகவல்களைப் பெறக் கூடிய இடங்களைத் தேசப்படத்தில் குறித்துப் பெயரிடுக
2. ஆரியர் குடியிருப்புக்களை அமைப்பதற்கு ஆதாரமாயமைந்த ஆறுகளையும் அதற்கு அருகில் அமைந்துள்ள குடியிருப்புகளையும் தேசப்படத்தில் குறித்துப் பெயரிடுக.

## பொலன்னறுவை இராச்சியத்தின் வீழ்ச்சி வரையிலான அரசியல் வரலாறு

**அரசுரிமை தாபித்தல்** வம்சக் கதைகள், கல்வெட்டுக்கள் ஆகிய வரலாற்று மூலாதாரங்களில் குறிப்பிடப்படும் தகவல்களுக்கு ஏற்ப அரச பதவி இலங்கையின் முக்கிய அரசியல் முறையாகியது. பௌத்த சமயத்தின் செல்வாக்குடன் மக்கள் சம்மதத்துடன் மக்களின் பாதுகாப்பிற்கும், நலன் பேணலுக்கும் உதவும் பதவியாக அரசன் என்ற பதவி சமூகத்தின் அங்கீகாரத்திற்கு உள்ளாகியது.

இலங்கையின் ஆரம்ப ஆரியர் குடியேற்றங்களின் ஆட்சியாளன் காமினி என்ற பெயரால் அழைக்கப்பட்டான். அத்துடன் ''அரசன்'' என்ற விருதுப் பெயரையும் இந்நாட்டின் ஆட்சியாளர்கள் பயன்படுத்தியுள்ளனர்.

முதன் முதலாக இளவரசன் பண்டுகாபயன் மகாவலி கங்கையின் அருகில் குடியேற்றங்களின் ஆதிக்கத்தை உறுதி செய்தபின் மேற்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள குடியிருப்புக்களையும் ஒன்றிணைத்துக் கொண்டு அனுராதபுரத்தின் அரசனாக முடி சூட்டிக்கொண்டான். பண்டுகாபய அரசன் சுயாதீனமாகக் காணப்பட்ட இந்தக் குடியிருப்புக்களை ஒன்றிணைத்து அனுராதபுரத்தின் அரசனானமை அரசியல் வரலாற்றில் முக்கிய நிகழ்வாகக் கருதப்படுகின்றது. இவன் அனுராதபுரத்தினை நகரத்துக்குரிய அனைத்து அம்சங்களும் கொண்ட முழுமையான நகரமாக உருவாக்கினான்.அவன் இலங்கையின் கிராமிய எல்லைகளை வரையறுத்ததாகவும் மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் தேவநம்பியதீசன் மன்னனுடைய அரசாட்சிக் காலம் வரை இந்தியாவில் காணப்பட்ட முடிசூட்டு விழாவைப் போன்ற முடிசூட்டு விழா இலங்கையில் காணப்பட்டதாகத் தகவல் கிடைக்கவில்லை. அசோகச் சக்கரவர்த்தியினால் முடிசூட்டு விழாவின் பொருட்டு அனுப்பி வைக்கப்பட்ட பொருட்களை (அரச சின்னங்களைப்) பயன்படுத்தி இரண்டாவது முறையாக தேவநம்பியதீசன் முறைப்படி முடிசூட்டு விழாவை நடத்தினான். அத்துடன் அசோக மன்னன் விரும்பிய ''தேவநம்பிய'' என்ற பட்டப் பெயரையும் சூட்டிக் கொண்டான். அதன் பின் ஆட்சியாளரை அழைப்பதற்கு மகாராஜா என்ற பெயரும் பயன்படுத்தப்பட்டது. முடிசூட்டு விழாவை நடத்துவதற்கு அரசி ஒருவர் இருத்தல் வேண்டும். அரசனின் முதன்மை இராணிக்குப் பட்டத்து இராணி என்ற பெயர் வழங்கப்பட்டது. அனுராதபுரத்தில் இருந்த முதன்மை அரசன் மகாராஜா என அழைக்கப்பட்டான். பிரதேச ஆட்சியாளர்கள் அரசன் என்ற பெயரினால் அழைக்கப்பட்டனர்.

44 வருடங்கள் அனுராதபுரத்தை ஆட்சி செய்த எல்லாளனைத் தோற்கடித்து உருகுணை இராச்சியத்தையும் அனுராதபுரத்தையும் இணைத்துக் கொண்டு துட்டகைமுனு அரசன் இலங்கையை ஒன்றிணைத்தான். இது ஒரே அரசனின் கீழ் இலங்கைத் தீவு முழுவதும் ஆட்சி செய்யப்பட்டமைக்கு உதாரணம் ஆகும்.

பௌத்த சமயத்தின் செல்வாக்கினால் பத்து அரச தர்மத்திற்கு (தசராஜதர்ம) ஏற்ப நாட்டை ஆட்சி செய்வது அரசனுடைய பொறுப்பாகக் கருதப்பட்டது. பிக்குகளின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதும் அரசாட்சியில் முக்கியமானதாகக் கருதப்பட்டது. அரசனுடைய முக்கிய பொறுப்பு உலகம், சாசனம் ஆகிய இரண்டையும் பாதுகாத்தல் ஆகும். இங்கு உலகம் என்பது மக்களையும், சாசனம் என்பது பௌத்த குருமார்களையும் குறிக்கின்றது. மக்களைப் பாதுகாத்தல், குளங்களை அமைத்தல், பௌத்தத்தை பாதுகாப்பதற்கு விகாரைகளை அமைத்தல் என்பன அரசனுடைய முக்கிய கடமைகளாகக் கருதப்பட்டன.

முன்பிருந்த அரசர்கள் பின்பற்றிய ஆட்சிமுறைச் சட்டத்திட்டங்களுக்கு அமைய நாட்டை ஆட்சி செய்வதற்கு அரசர்கள் முயற்சி செய்தனர். இதற்கேற்ப ''முன்னைய பழக்க வழக்கங்கள்'' ஆட்சி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டன. இவ்வாறு ஒழுங்கு முறையாகப் பரவிய அரசாட்சி முறையானது பெரும்பாலும் மக்களின் அங்கீகாரமுடைய ஆட்சிமுறையாகக் காணப்பட்டது. நாட்டின் பாதுகாப்பைத் திட்டமிடல், பொருளாதார சமயத் தேவைகளை நிறைவேற்றல் என்பன அரசனால் நிறைவேற்றப்பட வேண்டிய பிரதான கடமையாகவும், பொறுப்பாகவும் கருதப்பட்டன.

அரசாட்சியின் போது அமைச்சர்களும் முக்கிய இடத்ததைப் பெற்றிருந்தனர். வம்சக்கதைகளில் ''அமைச்சர்'', "அமெத்த'', "அமெதி" என்ற பெயர்கள் அவர்களை அழைப்பதற்கு பயன்படுத்தப்பட்டன.

அரசுரிமை தொடர்பில் சகோதரனிடம் இருந்து சகோதரன் அல்லது தந்தையிடமிருந்து மகன் அரசுரிமையைப் பெற்றுக் கொள்ளுதல் அங்கீகரிக்கப்பட்டதாக விளங்கியது.

### பண்டுகாபய அரசனும் அவனது வழித்தோன்றல்களும்

அரசன் பண்டுகாபயன் தொடர்பான விளக்கங்கள் மகாவம்சம் , தீபவம்சம் ஆகிய மூலாதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. பண்டுகாபயனுடைய தந்தை தீககாமினியாகும். இவர் பத்தகச்சானாவின் ஒரு சகோதரருடைய மகன் ஆவார். பண்டுகாபய இளவரசனின் தாயார் உன்மாத சித்திராவாகும் இதன்படி இளவரசன் பண்டுகாபயன் ஆரம்ப ஆரியர் குழுவின் பரம்பரையைச் சேர்ந்தவனாவான்.

இளவரசன் பண்டுகாபயன் தாயின் சகோதரர்கள் பலருடனும் போர் செய்து அவர்களைத் தோற்கடித்து அனுராதபுரத்தின் அரசனானான். ஆரியக் குடியேற்றங்கள் பலவற்றை ஒன்றிணைத்து ஒற்றையாட்சி உருவாகுவதற்கு இவர் ஆற்றிய சேவை முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அனுராதபுரத்தை ஆட்சியின் மத்திய நிலையமாகத் தெரிவு செய்த இவனே அனுராதபுர இராச்சியத்தின் ஆரம்ப ஆட்சியாளனாவான். ஒழுங்கமைக்கப்பட்ட நிர்வாக முறை அரசன் பண்டுகாபயனால் ஏற்படுத்தப்பட்டது. அனுராதபுர நகரம், வீதிகள், இறந்தவர்களை அடக்கம் செய்யும் மயான பூமி ஆகிய

அம்சங்களைக் கொண்ட திட்டமிடப்பட்ட நகரமாக அமைக்கப்பட்டது. இவ்வரசன் தனது ஆட்சியின் பத்தாவது ஆண்டில் நாட்டின் கிராமங்களின் எல்லைகளை வகுத்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ''நகரகுத்திகன்'' என்ற பதவியும் நகர பரிபாலனத்திற்காக ஏற்படுத்தப்பட்டது. இப்பதவிக்கு அபய இளவரசன் நியமிக்கப்பட்டான். 70 ஆண்டு காலம் பண்டுகாபயன் நாட்டை ஆட்சி செய்தான்.

பண்டுகாபயனுக்கு பின் அவனுடைய மகன் மூத்தசிவன் அரசன் ஆனான். பின்னர் அவனது புதல்வனான திஸ்ஸ (தீசன்) அரசனானான். இந்த அரசனின் ஆட்சிக் காலத்தில் இந்தியாவின் மௌரியப் பேரரசுடன் நட்புறவு நிலவியது. இளவரசன் திஸ்ஸ ஆட்சிக்கு வந்த பின்னர் இந்தியாவின் அசோகசக்கரவர்த்தியிடம் பல்வேறு அன்பளிப்பு பொருட்களுடன் தூதுக் குழுவை அனுப்பியதுடன் தீசனின் முடிசூட்டு விழாவைச் சம்பிரதாய முறைப்படி நடாத்துவதற்குத் தேவையான அரச சின்னங்களை இந்த தூதுவர்களிடம் அசோக மன்னன் அனுப்பி வைத்தார். சத்திரியர்களின் முடிசூட்டு விழா வைபவம் தேவநம்பியதீசன் மன்னனின் காலத்திலேயே ஆரம்பமானது. அன்று முதலே ''தேவநம்பிய'' என்ற பட்டப் பெயரும் தீசனுக்குப் பயன்படுத்தப்பட்டது.

மகிந்ததேரர் உள்ளிட்ட குழுவினர் இலங்கைக்கு வருகை தந்தமை, இலங்கையில் புத்த சாசனம் அமைக்கப்பட்டமை, பிக்குணி சங்கமித்தை இலங்கைக்கு வருகை தந்தமை, அதன் பின்பு புத்தசாசனத்தை அமைத்தமை, புனித வெள்ளரச மரக்கிளையை நாட்டியமை என்பன தேவநம்பியதீசனுடைய காலத்தில் இடம் பெற்ற முக்கிய சமய நிகழ்ச்சிகளாகும். இலங்கைக் கலாசாரத்தில் புத்துணர்வு ஏற்படுவதற்கு இவை காரணமாகின.

தேவநம்பியதீச மன்னனுக்குப் பின் அவனுடைய சகோதரன் இளவரசன் உத்திய அரசனானான். அவனின் மரணத்தின் பின்னர் அவனுடைய சகோதரன் மகாசிவனும் அதன் பின் சூரதிஸ்ஸ இளவரசனும் அரசனாகினர். சூரதிஸ்ஸ மன்னனுடைய காலத்தில் சேன, குத்திகன் ஆகிய இரு தென்னிந்திய குதிரை வியாபாரிகள் இலங்கையைக் கைப்பற்றி 22 வருடங்கள் ஆட்சி செய்தனர்.


இந்த ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து இளவரசன் அசேலன் நாட்டைக் கைப்பற்றி 10 வருடங்கள் ஆட்சி செய்தான். அசேலனுடைய காலத்தில் எல்லாளன் என்ற சோழ மன்னன் இலங்கையை ஆக்கிரமித்து அனுராதபுர ஆட்சியைக் கைப்பற்றினான். எல்லாள மன்னன் 44 வருடங்கள் ஆட்சி செய்ததாகக் குறிப்பிடப்படுகின்றது. அரசன் எல்லாளன் நீதியான ஆட்சியாளன் என மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எல்லாளன் அனுராபுரத்தை ஆட்சி செய்த காலத்தில் கிரிந்தி ஓயா நதிக் கரையில் மாகமத்தை (மகாகாமம்) தலைநகராகக் கொண்டு மன்னன் காவந்தீசன் உருகுணையை ஆட்சி செய்தான். அம்மன்னனின் மனைவி விகாரமகாதேவியாவார். இவர்கள் இருவருக்கும் கைமுனு, திஸ்ஸ என இரு புதல்வர்கள் இருந்தனர். இளவரசன் கைமுனு இளமைக் காலம் தொட்டு சோழர்களிடம் இருந்து நாட்டை மீட்க வேண்டும் என்ற எண்ணத்துடன் காணப்பட்டான்.

காவந்திசன் அரசனுக்குப் பின் உருகுணைக்கு அரசனான கைமுனு எல்லாளனைத் தோற்கடித்து இலங்கை முழுவதையும் தனது ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தான்.

எல்லாளனைத் தோற்கடித்த பின் சோழருக்கு எதிராக இன்னுமொரு படையெடுப்பை மேற்கொள்ள துட்டகை முனுவுக்கு நேர்ந்தது.

விஜித்தபுர போரின் போது தோல்வி அடைந்த எல்லாள மன்னன் உதவி கேட்டு இந்தியாவுக்கு அனுப்பிய செய்திக்கு விடையாக பல்லூகனுடைய தலைமையில் இந்தியாவிலிருந்து வந்த படையுடன் துட்டகைமுனு மோத வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்தப் போரில் துட்டகைமுனு வெற்றி அடைந்தான்.



*தேசப்படம் 3.4 - துட்டகைமுனு அரசனின் படைகள் பயணம் செய்த பாதையை காட்டும் படம்*

அந்நியரிடம் இருந்து நாட்டை மீட்டு முழு நாட்டையும் ஒன்று படுத்தி ஆட்சி செய்த ஆட்சியாளனாக துட்டகைமுனு அரசன் முக்கிய இடத்தை வகிக்கின்றான்.

கி.மு 161 தொடக்கம் 137 வரையில் 24 வருடங்கள் இலங்கையை ஆட்சி செய்த இம்மன்னன் இக்காலப்பகுதியில் பௌத்த சமய வளர்ச்சிக்காகப் பெரும் பணியாற்றினான். அனுராதபுரத்தில் மிரிசவெட்டி, ருவன்வெலிசாய, லோவமகாபாய ஆகிய சமய வழிபாட்டிடங்கள் இவனால் கட்டுவிக்கப்பட்டன.

அனுராதபுரக் காலத்து அரசர்களுள் வலகம்பா மன்னன் செய்த அரசியல் சேவையும் மிக முக்கியமானதாகும்.

கி.மு 109 தொடக்கம் 103 வரையான காலத்தில் கல்லாட நாகன் ஆட்சி செய்தான்.இவனது காலத்தில் மகாரத்தக்க என்ற சேனாதிபதி அரசுரிமையைப் பறித்துக் கொண்டான்.ஆட்சியைப் பறித்துக்கொண்ட போதிலும் இவன் மிகக் குறைவாக அதாவது 5 நாட்கள் மட்டுமே ஆட்சி செய்தான். சத்தாதிஸ்ஸ மன்னனின் இளைய புதல்வனான வட்டகாமினி (வலகம்பா) மகாரத்தக சேனாதிபதியைத் தோற்கடித்து கி.மு 103இல் அரசனானான். தமது பரம்பரைக்கு சொந்தமான அரசுரிமையை மீண்டும் பெற்றுக் கொள்வதில் இவன் வெற்றி பெற்றான்.

வலகம்பா மன்னன் ஆட்சிக்கு வரும் போது அரசியலில் ஒரு குழப்ப நிலை நிலவியது. உருகுணை இராச்சியத்தின் நகுல கிராமத்தில் தீய அல்லது திஸ்ஸ என்ற பிராமணன் கிளர்ச்சியை ஏற்படுத்தினான். நாட்டில் இவ்வாறான நிலைமைகள் நிலவுகையில் தென்னிந்தியாவிலிருந்து வந்த ஏழு பேரைக் கொண்ட குழுவினர் இலங்கையை ஆக்கிரமித்துக் கொண்டனர். இவ்வாறான ஆக்கிரமிப்பாளர்களில் ஒருவர் சோமாதேவியையும் இன்னொருவர் பாத்திர தாதுவையும் எடுத்துக்கொண்டு மீண்டும் இந்தியாவிற்கு சென்றனர். தாடியன், புலகத்தன், பாஹியன், பனையமாரன், பிளையமாரன் ஆகியோர் ஒருவரையொருவர் கொன்று 14 வருடம் அனுராதபுரத்தை ஆட்சி செய்தனர்.

அரசன் பாதுகாப்பிற்காக மலையரட்டைக்குச் சென்று ஒளிந்தான். அப்போது குப்பிகல மகாதிஸ்ஸ என்ற பிக்கு அரசருக்கு உதவி செய்தார். பெரும் இன்னல்களுக்கு மத்தியில் பௌத்த பிக்குகளினதும் மலைய தேசத்தின் ''தனசீவ'' என்ற பிரதேச ஆட்சியாளரின் உதவியுடனும் படைகளைத் திரட்டிக் கொண்டு கி.மு 89 இல் வலகம்பா மன்னன் ஆட்சியை மீண்டும் பெற்றுக் கொண்டான். அரசாட்சிக்கு வந்தவுடன் வலகம்பா அபயகிரி விகாரையை அமைத்து ஒளிந்திருக்கும் போது தமக்கு உதவி வழங்கிய மகாதிஸ்ஸ பிக்குவிற்கு அர்ப்பணித்தான். இது இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட (பிக்கு ஒருவருக்கு செய்த) முதலாவது தனிப்பட்ட விகாரை அர்ப்பணமாகும். அபயகிரி விகாரையை இவ்வாறு அர்ப்பணம் செய்தமை பௌத்த சமயத்தில் முதலாவது பிரிவினைக்கு (நிகாய பேதம்) அடிப்படையாகியது.

இது வரை பரம்பரை பரம்பரையாக பேணப்பட்டு வந்த திரிபிடகம் மாத்தளை அலுவிகாரையில் நூல்வடிவம் பெற்றது இவ்வரசனுடைய காலத்திலாகும். வலகம்பா மன்னன் எதிரிகளிடமிருந்து நாட்டைப் பாதுகாத்து கி.மு 89 தொடக்கம் 77 வரை ஆட்சி செய்தான்.

அனுராதபுரக் கால அரசியல் வரலாற்றை கற்கையில் வசப மன்னன் ஆட்சிக்கு வந்தமை இன்னொரு புதிய அரச பரம்பரையை உருவாக்கியமையால் மிக முக்கிய இடம் வகிக்கின்றது. வசப மன்னன் இலம்பகர்ணவம்சத்தின் முதல் ஆட்சியாளனாவான். வசப மன்னனுடன் ஆரம்பமான இலம்பகர்ண வம்சம் 370 வருடங்களுக்கு அதிகமாக நின்று நிலைத்தது. வசப மன்னன் கி.பி 65 தொடக்கம் 109 வரை 44 வருடங்கள் நாட்டினை ஆட்சி செய்தான். வசப மன்னனுடைய ஆட்சிக் காலத்துக்குரிய கல்வெட்டுக்கள் வடக்கில் யாழ்பாண தீபகற்பத்திலும் தெற்கில் சித்துள் பவ்வ, திஸ்ஸமகாராம ஆகிய இடங்களிலும், கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்திலும் மேற்கில் குருணாகல் மாவட்டத்திலும் கிடைக்கப் பெற்றுள்ளன. இவை வசப மன்னனின் ஆட்சி இலங்கை முழுவதிலும் பரவியிருந்தமைக்கு சான்றுகளாகின்றன.

குளங்கள், நீர்ப்பாசனக் கால்வாய்கள் பலவற்றை அமைத்து விவசாய அபிவிருத்திக்கும் விகாரைகள் முதலியவற்றை அமைத்து புத்த சாசனத்தின் வளர்ச்சிக்கும் இவ்வரசன் பெரும் பணியாற்றியுள்ளான்.

கி.பி 276 தொடக்கம் 303 வரை இலங்கையை ஆட்சி செய்த மகாசேனன் ஆட்சிக் காலம் வரலாற்று ரீதியாக முக்கியமானது. இவன் கோத்தாபய மன்னனுடைய இளைய புதல்வன் ஆவான். இவனுக்குத் தென்னிந்தியாவில் இருந்து வந்த சங்கமித்திர என்ற வைத்துல்ய வாத (மாகாயானம்) பிக்கு கலைகளை கற்பித்தார். இப்பிக்குவின் ஆதிக்கத்தினால் மகாசேன மன்னன் மகாயான பௌத்தத்தைப் பரப்புவதற்கு அனுசரணை வழங்கினார். அரச அனுசரணை கிடைத்தமையால் மகாயான பௌத்தம் பரவ ஏதுவாகியது.

அத்துடன் மகாவிகாரைக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு அரசைத் தூண்டி விடுவதற்கு சங்கமித்திர பிக்கு முற்பட்டார். மகாவிகாரை பிக்குகளுக்கு தானம் கொடுப்பவர்களுக்கு தண்டனை வழங்கவும் கட்டளையிடப்பட்டது. இதனால் மகாவிகாரை பிக்குகள், உருகுணை, மலய பிரதேசங்களுக்குச் சென்றமையால் அனுராதபுர மக்களுக்கு வழிகாட்டுவதற்கு எவரும் இருக்கவில்லை. இதனால் அரசுக்கு எதிராக மக்கள் கிளர்ச்சி செய்தனர்.

மேகவர்ணாபய என்ற அமைச்சர் இக்கிளர்ச்சிக்கு தலைமை தாங்கினார். பின் மேகவர்ணாபயனுக்கும், அரசனுக்கும் இடையில் ஏற்பட்ட கலந்துரையாடலின் விளைவாக கிளர்ச்சி முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. அதன் பின் அரசன் மகாவிகாரையை புனருத்தாரணம் செய்தார்.

மகாசேன மன்னன் மகாவிகாரை எல்லையினுள் ஜேத்தவனராம என்ற விகாரையை அமைத்து சாகலிக என்ற சமயப் பிரிவினருக்கு கையளித்தார். இவ்வாறு அமைக்கப்பட்ட ஜேத்தவனராம இலங்கையின் மிக பெரிய தூபியாகும்.

சமய ரீதியாக ஏற்பட்ட இந்நிலைமை இலங்கையின் அரசியலிலும் தாக்கத்தை ஏற்படுத்தி கிளர்ச்சி போன்றவை ஏற்படுவதற்கு ஏதுவாகியது. இவ்வாறான நிலைமைகள் இருந்த போதும் இவ்வரசன் மின்னேரியா, மாகல்ல, குருளுவாவி ஆகிய குளங்களை அமைத்து விவசாய விருத்திக்கு பங்களிப்புச் செய்தான். ஜேத்தவனராமை, மின்னேரியா விகாரை, கோகண்ண விகாரை, கலன்தக விகாரை என்பன இவனால் கட்டப்பட்டவையாகும்.

மகாசேன மன்னனால் விவசாயத்திற்கு செய்யப்பட்ட முக்கிய சேவையாக விளங்குவது மின்னேரியக் குளத்தை அமைத்து அப்பிரதேசத்தை விருத்தி செய்தமையாகும். இதனால் இவன் ‘‘மின்னேரியாத் தெய்வம்’’என அழைக்கப்பட்டான்.

மித்சென் மன்னனுடைய காலத்தில் மீண்டும் தென்னிந்திய ஆக்கிரமிப்பாளர் சிலர் இலங்கையை ஆக்கிரமித்து ஆட்சியைக் கைப்பற்றினர். பண்டுபாரித்த, குட்டபாரின்த, திரிதர, தாடிகன், பீடிகன் என்ற பெயர்களுடைய இவர்கள் முறையே 27 வருடங்கள் அனுராதபுரத்தைக் கைப்பற்றி ஆட்சி செய்தனர்.

இத்தென்னிந்திய ஆட்சியாளர்களைத் தோற்கடித்து இராசரட்டையை மீண்டும் இளவரசன் தாதுசேனன் கைப்பற்றினான். இவன் மௌரிய அரச வம்சத்தைச் சேர்ந்தவன். இளமைக் காலத்தில் எதிரிகளிடமிருந்து பாதுகாப்பைப் பெற்றுக்கொள்வதற்காக தனது மாமனாகிய பௌத்த பிக்குவுடன் அனுராதபுர விகாரையொன்றில் துறவியாக இருந்ததாகக் கூறப்படுகின்றது. எதிரிகளுக்கு அருகில் வசிப்பது அவ்வளவு பாதுகாப்பானதல்ல என்பதால் கலா ஓயாவின் வலது பக்க விகாரைக்கு அழைத்துச் செல்லப்பட்டான். பின் துறவு வாழ்வை விட்டு படை திரட்டும் வேலையில் ஈடுபட்டான். திராவிட ஆட்சியாளரைத் தோற்கடித்து கி.பி 459இல் அரசனாகினான். திராவிடர்களைத் தோற்கடித்து இலங்கையில் ஆட்சியை நிறுவியமை இவர் செய்த பாரிய அரசியல் சேவையாகும். கலா வாவியை அமைத்ததுடன் யோதஎல கால்வாய் என்ற ஜயகங்கைக் கால்வாயை அமைத்ததன் மூலம் விவசாய வளர்ச்சிக்குப் பாரிய சேவையாற்றியுள்ளான்.

தாதுசேன மன்னன் தனது இரண்டாவது மனைவியின் மகன் காசியப்பனால் மரணமடைந்தான் என்று வரலாறு கூறுகின்றது. காசியப்பன் ''மிகார'' என்ற சேனாதிபதியின் ஆலோசனைப்படி செயற்பட்டதாகக் கூறப்படுகின்றது. மிகார தாதுசேன மன்னனின் மருமகனாக இருந்ததுடன் இவன் அரசனுடன் வெறுப்புணர்வைக் கொண்டவனாகக் காணப்பட்டான். காசியப்பன் ஆட்சிப்பலத்தைப் பெற்றுக் கொண்டபோது ஆட்சிக்கு சட்ட பூர்வமாக உரித்துடைய பட்டத்து இராணியின் மகன் முகலன் இராச்சியத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் படை திரட்டுவதற்கு இந்தியாவிற்குச் சென்றான். சகோதரனிடம் இருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டுத் தனது ஆட்சியின் மத்திய நிலையமாக அனுராதபுரத்தில் இருந்து சற்றுத் தூரத்தில் காணபட்ட சீகிரியக் குன்றைத் தெரிவு செய்தான்.

காசியப்ப மன்னன் அங்கு கோட்டையை அமைத்து குன்றின் உச்சியில் அரசமாளிகை, மற்றும் கட்டடங்கள் என்பவற்றை நிர்மாணித்தான். இவற்றின் சிதைவுகளை இன்றும் காணக் கூடியதாக உள்ளது.

அரச சபை மண்டபம், நீர்ப் பூங்கா, சுவர் ஓவியம், கண்ணாடிச் சுவர் ஆகியவை இவற்றுள் முக்கியமானவை. சீகிரிய இராசதானி கோட்டை போன்றவற்றுடன் கலையம்சங்களிலும் முக்கியத்துவம் பெறுகின்றது.

கி.பி 477 தொடக்கம் 495 வரையிலான 18 வருடங்கள் காசியப்பனின் ஆட்சிக் காலமாகக் கருதப்படுகின்றது.

கி.பி 495இல் இளவரசன் முகலன் சேனையுடன் வந்து காசியப்பனைத் தோற்கடித்து ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டான்.

அனுராதபுரக் கால அரசர்களுள் முதலாம் அக்போ அரசனும் முக்கியமானவன்

ஆகும். இவன் நீர்ப்பாசனத் துறையை விருத்தி செய்து விவசாயத்திற்கு பாரிய சேவையாற்றியுள்ளான். இவனது ஆட்சிக் காலம் கி.பி 575 - 608 வரையுமாகும்.இது அமைதியும் செழிப்பும் நிறைந்த காலமாகும். முதலாம் அக்போவைத் தொடர்ந்து இரண்டாம் அக்போ அரசனானான். (கி.பி 608 தொடக்கம் கி.பி 618 வரை) இவ்வரசன் குளங்களை அமைத்து விவசாயத்தை மேம்படுத்தினான். கந்தளாய், கிரித்தளை வாவி என்பன இவனுடைய ஆட்சிக்காலத்தில் நிறைவு பெற்ற நீர்ப்பாசன அமைப்புகளாகக் குறிப்பிடலாம். வலாகஸ்ஸ வாவி இவனுடைய காலத்தில் புனரமைப்புச் செய்யப்பட்டது.


இவனுடைய ஆட்சிக் காலத்தில் கலிங்க தேசத்து அரசன் தனது மனைவியுடனும்,அமைச்சனுடனும் பாதுகாப்புத் தேடி இலங்கைக்கு வந்திருந்தான். இதிலிருந்து இவ்வரசன் கலிங்க தேசத்துடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தமை தெரிய வருகின்றது.

அனுராதபுரக் காலத்தின் இறுதி அரைப்பகுதியில் ஆட்சிக்கு வந்த அரசர்களுள் நான்காம் மகிந்தனை சிரேஷ்ட ஆட்சியாளன் எனக் குறிப்பிடலாம். கி.பி 956 - 972 வரையான காலம் இம்மன்னனுடைய காலமாகும். இவனுடைய பட்டத்து இராணியாக கலிங்க தேச அரச குமாரி விளங்கினாள். நான்காம் தப்புள, மூன்றாம் உதயன், மூன்றாம் சேனன், நான்காம் உதயன் ஆகிய அரசர்களின் கீழ் முப்பது வருடங்கள் உருகுணைப் பிரதேசத்தை ஆட்சி செய்தான். நான்காம் சேன மன்னனின் ஆட்சிக் காலத்தில் இவன் யுவ ராஜாவாகவும் விளங்கினான். இம்மன்னன் ஆட்சிக்கு வந்ததும் கிளர்ச்சி ஒன்று ஏற்பட்டபோதிலும் மன்னனால் அது அடக்கப்பட்டது. இவனின் ஆட்சிக் காலத்தில் பராந்தகன் என்ற சோழ மன்னனின் ஆக்கிரமிப்பிற்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டது. மூன்றாம் கிருஷ்ணன் என்ற இராஷ்டிரகூட அரசன் வட பிரதேசத்தை ஆக்கிரமிப்பிற்கு உட்படுத்தினான். இவ்வாறான படையெடுப்புக்களை முறியடித்து அதிகாரத்தை நிலைநாட்டுவதில் மன்னன் வெற்றி கண்டான்.

அனுராதபுரத்தின் இறுதி அரசனாக ஐந்தாம் மகிந்தன் கி.பி 982 தொடக்கம் 1017 வரை ஆட்சி செய்தான். இவன் திறமையான மன்னன் அல்ல. மக்களிடம் வரி அறவிடக்கூட முடியாதவனாக இருந்தான். கூலிப்படையினருக்கு சம்பளம் வழங்க முடியாமையால் அவர்கள் அரச மாளிகையைச் சுற்றி வளைத்து சம்பளம் வழங்குமாறு வற்புறுத்தினர். இதனால் இவன் கி.பி 992 இல் உருகுணைக்குத் தப்பி ஓடினான். இதனால் இராசரட்டைப் பிரதேசத்தில் குழப்ப நிலை உருவானது.

கி.பி 993 இல் முதலாம் இராஜராஜ சோழ மன்னன் இலங்கையை ஆக்கிரமித்தான். சோழர்கள் நாட்டின் இராசரட்டை பிரதேசத்தைத் தமது ஆட்சியின் கீழ் கொண்டு வந்து மும்முடிச் சோழ மண்டலம் என்று பெயர் சூட்டினர். பொலன்னறுவையை ஆட்சி மையமாகத் தெரிவு செய்து ஜனநாத மங்களம், ஜனநாதபுரம் என்ற பெயர்களால் அதனை அழைத்தனர்.

## பொலன்னறுவைக் கால முக்கிய ஆட்சியாளர்கள்




தேசப்படம் 3.5 விஜயபாகுவின் சேனைகள் பயணம் செய்த பாதையைக் காட்டும் படம்

கி.பி 1017இல் முதலாம் இராஜேந்திரன் இலங்கையை ஆக்கிரமித்து அரசன் மகிந்தனைச் சிறைப்பிடித்து சோழ நாட்டிற்குக் கொண்டு சென்றான். கி.பி 1029இல் அரசன் மகிந்தன் அங்கு இறந்தான். கி.பி 1018 - 1070 வரை இராசரட்டைப் பிரதேசத்தைக் கைப்பற்றி சோழர் ஆட்சி செய்தனர். அவர்களை விரட்டி விட்டு இலங்கையை மீண்டும் சோழர்களிடம் இருந்து மீட்டு எடுத்தவன் முதலாம் விஜயபாகு ஆவான். இவன் இளமைக் காலத்தில் கித்திக் குமரன் அல்லது கீர்த்தி எனப்பட்ட பெயரால் அழைக்கப்பட்டான். இவனது தந்தையார் பெயர் மகாசாமி மொகல்லான தாய் லோகிதா தேவியாகும். கீர்த்தி குமாரனுக்குப் புத்தராஜன் என்னும் புதல்னா எனப்பட்ட சேனாதிபதி பாதுகாப்பு வழங்கினான். கீர்த்தி, புத்தராஜனின் உதவியுடன் கேசதாது காசியப்பனைத் தோற்கடித்து கி.பி 1055இல் கதிர்காமத்தை நிர்வாக மையமாகக் கொண்டு முதலாம் விஜயபாகு என்ற பெயருடன் உருகுணையின் ஆட்சியாளனானான்.

சோழர்கள் விஜயபாகுவை அடக்கும் பொருட்டு உருகுணையை ஆக்கிரமித்தனர். இச்சந்தர்ப்பத்தில் அரசன் எதிரிகளுக்கு முகம் கொடுக்காது, தமது படைகளின் பலம் அழிவதைத் தவிர்ப்பதற்காக நிர்வாக மையத்தை வேறு இடத்திற்கு மாற்றினான். சோழர்கள் மீண்டும் விஜயபாகுவிற்கு எதிராக ஆக்கிரமிப்பை மேற்கொண்டனர். இவ்வேளையில் விஜயபாகுவின் வீரர்களான ரவி தேவ், சல ஆகிய இருவரும் சோழர்கள் பக்கம் சேர்ந்தனர். அரசன் பலுட்ட கிரி என்ற இடத்திற்குப் பின்வாங்கினான். பின் மீண்டும் சோழர்களைத் தோற்கடித்து பொலன்னறுவையைத் தற்காலிகமாக கைப்பற்றினான். இருப்பினும் சோழர்களுக்கு மீண்டும் உதவிச் சேனை கிடைத்தமையால் முதலாம் விஜயபாகு மன்னன் வாகிரிகலையை நோக்கிப் பின்வாங்கவேண்டியேற்பட்டது.

விஜயபாகு மீண்டும் சேனையை ஒழுங்கமைத்து உருகுணையில் மகாநாககூல என்னும் இடத்தில் இருந்து மூன்று வழிகளில் சேனைகளை அனுப்பி கி.பி 1070இல் மீண்டும் பொலன்னறுவையைக் கைப்பற்றி நாட்டை ஒன்றிணைத்தான்.

கி.பி 1017 தொடக்கம் - 1070 வரை நிலவிய சோழர் ஆட்சியில் இருந்து பொலன்னறுவையைக் கைப்பற்றியமை அரசன் முதலாம் விஜயபாகுவினால்

மேற்கொள்ளப்பட்ட பிரதான அரசியல் சேவையாகும். மகாவம்சத்தின் இரண்டாம் பகுதி, பனாக்கடுவ செப்பேடு, அம்பகமுவ கல்வெட்டு என்பன இவ்வரசன் பற்றிய தகவல்களை வெளியிடும் பிரதான மூலங்களாகும். நீர்ப்பாசனத்தைப் புனருத்தாரணம் செய்து நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பியதுடன் புத்தசாசன வளர்ச்சிக்காக இவ்வரசனால் பாரிய சேவையாற்றப்பட்டது. இவ்வரசன் சோழர்களின் அச்சுறுத்தலுக்கு உட்பட்டமையால் கலிங்க தேசத்துடனும், பாண்டிய தேசத்துடனும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டான். திரிலோக சுந்தரி என்ற பெயருடைய கலிங்க இளவரசியைத் திருமணம் செய்து கொண்டான். தனது சகோதரியான மித்தா இளவரசியை பாண்டிய இளவரசனுக்குத் திருமணம் செய்து கொடுத்தான். பர்மாவுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டமையால் அரசனுக்கு உதவும் பொருட்டு பர்மாவில் இருந்து வியாபாரப் பொருட்களை ஏற்றிக் கொண்டு கப்பல்கள் இங்கு வந்தன. முதலாம் விஜயபாகுவிற்கு பின் அவனால் ஒன்றிணைக்கப்பட்ட நாடு மீண்டும் பிரிவினைக்கு உள்ளாகியது. இவ்வாறு பிரிவினைக்கு உள்ளாகிய நாட்டை மீண்டும் ஒன்று படுத்திய அரசன் மகாபராக்கிரமபாகுவான். கி.பி 1153 - கி.பி 1186 வரை) மகாவம்சத்தின் இரண்டாம் பகுதி தெவனகல கல்வெட்டு, கல்விகாரை சுவர்க்கல்வெட்டு, சங்கமுவிகாரைக் கல்வெட்டு என்பன இந்த அரசன் தொடர்பான தகவல்களை வெளியிடும் பிரதான மூலங்களாகும்.

கீர்த்தி ஸ்ரீ மேகன் என்ற பெயருடைய சிறிய தந்தையின் உதவியுடன் இளவரசன் மகாபராக்கிரமபாகு தக்கண தேசத்தின் ஆட்சியாளனானான். இதன் தலைநகரமாக பராக்கிரமபுரம் விளங்கியது. இது இன்றைய பண்டுவஸ்நுவர பிரதேசமாகும். இதன் பின் இவன் மலையரட்டை என்று அழைக்கப்பட்ட பிரதேசத்தையும் தனது ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தான். இதற்கிடையில் பொலன்னறுவையையும் தாக்கினான். பொலன்னறுவையைக் கைப்பற்ற எண்ணியிருந்த இரண்டாம் கஜபாகு மன்னுடனும், உருகுணு மன்னனுடனும் முதலாம் பராக்கிரமபாகு மோத வேண்டிய நிலை ஏற்பட்டது. இவ்வாறு பராக்கிரமபாகுவிற்கும் கஜபாகுவிற்கும் இடையில் ஏற்பட்ட பிரச்சினைக்கு மத்தியில் இருவருக்கும் இடையில் உடன்பாடு ஏற்பட்டதென கூறப்படுவதுடன் சங்கமு விகாரை கல்வெட்டு இதனை மேலும் நிரூபிப்பதாக உள்ளது. இவ்வொப்பந்தப்படி இரண்டாம் கஜபாகு மன்னனின் மரணத்தின் பின் பொலன்னறுவையின் சிம்மாசனம் அரசன் பராக்கிரமபாகுவிற்கு உரியதாக இருந்தபோதிலும் மானாபரணன் இடையில் குறுக்கிட்டமையால் அவனைத் தோற்கடித்து பொலன்னறுவை இராச்சியத்தைப் பெற வேண்டிய நிலை பராக்கிரமபாகுவிற்கு ஏற்பட்டது.

மானாபரணனுக்குப் பின் உருகுணை சுகலாதேவியின் கீழ் ஆட்சி செய்யப்பட்டது. தந்ததாது, பாத்திரதாது என்பவை சுகலாதேவியின் கீழ் இருந்தமையால் தனது ஆட்சியை உறுதி செய்து கொள்வதற்குப் பராக்கிரமபாகுவிற்குத் தடையாக அமைந்தது. இதனால் உருகுணையை ஆக்கிரமித்து சுகலாதேவியைத் தோற்கடித்து தந்ததாதுவையும், பாத்திரதாதுவையும் பெற்றுக்கொண்டதுடன், அரசாட்சியையும் பராக்கிரமபாகு உறுதிப்படுத்திக் கொண்டான்.

பராக்கிரமபாகு பர்மாவை ஆக்கிரமித்துக் கைப்பற்றி வெற்றிபெற்றதுடன் பாண்டிய நாட்டில் சிம்மாசனம் தொடர்பாக ஏற்பட்ட போராட்டத்தில் பராக்கிரம

பாண்டியனின் வேண்டுகோளின்படி பராக்கிரமபாகு படைகளை அனுப்பி வைத்ததாகக் குறிப்பிடப்படுகின்றது. விவசாயத்தின் பொருட்டு இவ்வரசனால் பாரிய சேவையாற்றப்பட்டதாகக் குறிப்பிடப்படுகின்றது. மூன்று சமயப் பிரிவினரையும் ஒற்றுமைப்படுத்தி விகாரை அமைத்து புத்த சாசனத்தின் வளர்ச்சிக்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டான்.

முதலாம் பராக்கிரமபாகுவிற்குப் பின் ஆட்சி உரிமையைப் பெற மகன் அல்லது சகோதரன் இன்மையால் அவனது தங்கையின் மகன் இரண்டாம் விஜயபாகு அரசனானான். அவனுடைய ஆட்சிக்காலம் ஒரு வருடம் மாத்திரமே நிலைத்தது. அதன் பின் ஆறாம் மகிந்தன் அரசனானான். இவனுடைய ஆட்சிக்காலம் ஐந்து நாட்கள் மட்டும் நிலைத்தது.

கி.பி 1187இல் அரசன் நிஸ்ஸங்கமல்லன் அரசனானதுடன். கி.பி 1196 வரையில் அவன் ஆட்சி புரிந்தான். அவன் கலிங்க வம்சத்தைச் சேர்ந்தவன்.

முதலாம் பராக்கிரமபாகுவினால் ஏற்படுத்தப்பட்ட அரசியல் ஐக்கியத்தை மேலும் இவனால் நிலைநிறுத்திக் கொள்ளக் கூடியதாக இருந்தது. கலிங்க வம்சத்தினருக்கு அரசாட்சியில் உள்ள உரிமையைக் கல்பொத கல்வெட்டு உட்பட கல்வெட்டுகளில் குறிப்பிட்டுள்ளான். அதிக அளவிலான கல்வெட்டுக்களை அமைத்தது இவ்வரசனேயாவான். அவனுடைய நீண்ட கல்வெட்டு ''கல்பொத'' கல்வெட்டாகும்.

தொலைதூர இடங்களிலிருந்து வருகின்ற மக்களுடன் தொடர்பை வைத்துக்கொள்ள இவ்வரசன் முயற்சி எடுத்துள்ளான். உருகுணை, மாயா, மிஹிட்டி பிரதேசங்களுக்கு சுற்றுப் பயணம் செய்ததாகக் குறிப்பிடப்படுவது இதனைத் தெளிவுபடுத்துகின்றது. அத்துடன் களனி மகியங்கனை ஆகிய பௌத்த வழிபாட்டுத் தலங்களுக்கும் வழிபாட்டிற்காகச் சென்றதாகக் குறிப்பிடப்படுகின்றது.

அரசன் நிஸ்ஸங்கமல்லன் மக்களுக்கு வரிச்சலுகைகளை வழங்கியும் பெற்றுத் தந்தும் சொத்துக்களை அன்பளிப்பாக வழங்கியும் உதவினான். இம்மன்னன் ''துலாபாரக்''கொடைகளை வழங்கினான். துலாபாரம் என்பது ஒருவரது நிறைக்கு சமமாக வழங்கப்படும் கொடுப்பனவு ஆகும். அரசனுடைய மனைவியினதும் பிள்ளைகளினதும் நிறைக்கு சமமாக துலாபாரம் வழங்கப்பட்டதாக கூறப்படுகின்றது. இவ்வரசன் பாண்டிய நாட்டை ஆக்கிமித்ததாகவும் கூறப்பட்டது.

## தென் இந்திய ஆக்கிரமிப்பு

அனுராதபுரக்காலத்தின் ஆரம்பத்தில் இருந்தே இடையிடையே தென்னிந்தியாவின் ஆக்கிரமிப்புக்கு முகம் கொடுக்கவேண்டிய நிலை இருந்தது. இலங்கையின் ஆட்சி துறையில் குழப்பம் காணப்பட்ட வேளையிலும் பலவீனமான ஆட்சியாளர் ஆட்சிக்கு வந்த போதும் தென்னிந்திய ஆக்கிரமிப்புக்கள் இடம்பெற்றன.

மகாவம்சத்திற்கு ஏற்ப முதன்முதலாக தென்னிந்திய ஆக்கிரமிப்பு நிகழ்ந்தது சூரதிஸ்ஸ மன்னனுடைய காலத்திலாகும். இவ்வாக்கிரமிப்பு சேனன், குத்திகன் ஆகிய இரு குதிரை வியாபாரிகளால் மேற்கொள்ளப்பட்டது. இவர்கள் அனுராதபுரத்தைக் கைப்பற்றி 22 வருடங்கள் ஆட்சி செய்தனர்.

இந்த ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து நாடு அசேல மன்னனால் மீட்கப்பட்டது. அவனுடைய ஆட்சிக் காலத்தில் நாடு சோழரின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியது. இது எல்லாளனால் மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பாகும்.எல்லாளன் 44 ஆண்டுகள் ஆட்சி செய்தான். இவன் நீதி வழுவாத மன்னன் என மகாவம்சத்தில் குறிப்பிடப்படுகின்றது. கி.மு 161இல் துட்டகைமுனு அரசன் எல்லாளனைத் தோற்கடித்து அனுராதபுர இராச்சியத்தைக் கைப்பற்றி முழு இலங்கையையும் ஒன்றுபடுத்தி வலகம்பா மன்னன் ஆட்சிக்கு வந்த பின் புலகத்தன் உட்பட ஏழு தென்னிந்தியத் தலைவர்கள் சேனையுடன் வந்து ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றினர். அவர்களுள் ஐவர் 14 வருடங்கள் அனுராபுரத்தை ஆட்சி செய்தனர். 14 வருடங்களுக்குப் பின் வலகம்பா மன்னன் கி.மு 89இல் மீண்டும் ஆட்சியைப் பெற்றுக் கொண்டான். அவர்களுள் இருவர் பாத்திரதாதுவையும், சோமாதேவியையும் கைப்பற்றிச் சென்றனர்.

''மித்தசேனன்'' அரசனுடைய ஆட்சிக் காலத்தில் பண்டு, பாரிந்த, குட்டபாரிந்த, திரிதரன், தாடியன், பீடியன் ஆகிய தென்னிந்தியர் இலங்கையை ஆக்கிரமித்தனர். இவர்கள் 27 வருடங்கள் ஆட்சி செய்த பின் மன்னன் தாதுசேனனால் நாடு மீட்கப்பட்டு ஐக்கியப்படுத்தப்பட்டது.

முதலாம் சேனனின் காலத்தில் பாண்டிய நாட்டில் இருந்து வந்த ஸ்ரீ மாற ஸ்ரீ வல்லபன் இலங்கையை ஆக்கிரமித்த பொழுதிலும் அவன் செல்வத்தை சூறையாடித் திரும்பிச் சென்றதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நான்காம் மகிந்தனுடைய காலத்தில் இந்தியாவின் இராஷ்டிர கூட மன்னனான மூன்றாம் கிருஸ்ணன் அனுராதபுர இராச்சியத்தை ஆக்கிரமித்தான். கி.பி 993இல் முதலாம் இராஜராஜன் என்ற சோழ அரசன் இலங்கையை ஆக்கிரமித்தான். அப்போது இங்கு காணப்பட குழப்பமானஅரசியல் நிலைமையால் இலகுவாக அவனால் ஆட்சியைக் கைப்பற்ற முடிந்தது.

கி.பி 1017இல் முதலாம் இராஜேந்திரன் உருகுணையைக் கைப்பற்றி ஐந்தாம் மகிந்தனைக் கைதியாக இந்தியாவிற்கு அழைத்துச் சென்றான். இவர்கள் பொலன்னறுவையை ஆட்சி மையமாக (தலைநகராக) தெரிவு செய்தனர். அன்று முதல் பொலன்னறுவை இலங்கையின் தலைநகராக மாறியது. கி.பி 1070இல் முதலாம் விஜயபாகு மன்னனால் சோழர்களிடம் இருந்து பொலன்னறுவை கைப்பற்றப்பட்டது. நிஸ்ஸங்கமல்லனின் பின் பொலன்னறுவை இராச்சியத்தின் பிரதானமான ஆட்சியாளர் எவரும் உருவாகவில்லை. அரசியலில் உறுதியற்றதன்மை ஏற்பட்டது. இதனால் படை வீரர்கள் பலம் பெற்றனர். இவர்கள் அரசனின் பலத்தைக்

குறைத்தனர். இச்சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்திக் கொண்டு கி.பி 1215இல் கலிங்க மாகன் பொலன்னறுவையின் இறுதி மன்னன் பராக்கிரம பாண்டியனைத் தோற்கடித்து ஆட்சியைப் பெற்றுக் கொண்டான்.

கலிங்க மாகனால் அரசுரிமை உடைய இளவரசர்கள் கொல்லப்பட்டதுடன், பிக்குகளுக்கும், பிரபுகளுக்கும் இவனால் அதிக துன்பம் ஏற்பட்டதாகவும் நூல்கள், விகாரைகள் என்பவற்றை அழித்ததாகவும் பூஜாவலி, மகாவம்சத்திள் மூன்றாம் பகுதியிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.


### சாராம்சம்

- ★ வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் மனிதன் தொடர்பான தொல்பொருளியல் சான்றுகள் நாட்டின் பல பகுதிகளிலும் கிடைக்கப் பெற்றுள்ளன.
- ★ கி.மு 6 ஆம் நூற்றாண்டு தொடக்கம் தொடர்ச்சியாக ஆரியக் குடிப்பெயர்வுகள் இடம் பெற்றன.
- ★ நதிக்கரைகளின் சமவெளிப் பகுதிகளில் இக்குடியிருப்புகள் பரம்பலடைந்தது.
- ★ ஆரியருடைய அரசியல், பொருளாதாரம், சமூகம், கலாசாரத்தின் விசேடப் பண்புகள்.
- ★ அனுராதபுர இராச்சியத்தின் ஆரம்பம் தொடக்கம் பொலன்னறுவை இராசதானியின் வீழ்ச்சி வரை உள்ள அரசர்களும் முக்கிய அரசியல் நிகழ்வுகளும்
- ★ அனுராதபுரக் காலத்தில் இருந்து பொலன்னறுவை காலத்தின் இறுதி வரை எற்பட்ட தென்னிந்திய படையெடுப்புகள்.


### செயற்பாடு :

இலங்கை வரலாற்றின் முக்கிய அரசர்கள் சிலரின் பெயர் கீழே தரப்பட்டுள்ளன.

1. பண்டுகாபயன்
2. துட்டகைமுனு
3. தேவநம்பியதீசன்
4. முதலாம் விஜயபாகு
5. வலகம்பா

மேற் கூறிய அரசர்கள் தொடர்பாக கீழே கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளில் தகவல்களைத் திரட்டுக.

1. அரச பலத்தைப் பெற்றுக் கொண்ட விதம்
2. முகம் கொடுத்த சவால்கள்
3. சமயப் பணிகள்

**பயிற்சி :**

கீழேக் காட்டப்பட்டுள்ள அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| காலம் | இலங்கையை ஆட்சி செய்த அரசர்களும் ஆட்சிக் காலமும் | ஆக்கிரமிப்பாளரின் பெயர்/ ஆக்கிரமிப்புக் குழுவின் பெயர் |
|---|---|---|
| பொலன்னறுவைக் காலம் | *1* ......................................................<br>*2* ...................................................... | *1* ......................................................<br>*2* ...................................................... |
| அனுராதபுரக் காலம் | *1* ......................................................<br>*2* ...................................................... | *1* ......................................................<br>*2* ...................................................... |

| மூலாதாரங்கள் | நிறுவப்பட்ட அரசுகளும் காலமும் |
|---|---|
| கல்பொத்தக் கல்வெட்டு | |
| பனாக்கடுவ செப்பேடு | |
| கல்விகாரை கல்வெட்டு | |
| அம்பகமு கல்வெட்டு | |
| தெவனகல கல்வெட்டு | |